www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 5th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக்கற்றையும் I<br>Communication and Media Studies I | Two hours<br>Gr -13 (2022) | 29 | T | I |

**அறிவுறுத்தல்கள்**

- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1) (2) (3) (4) (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுதலுக்கமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவதன் மூலம் காட்டக.

## பகுதி I

01. தொடர்பாடுநர் மற்றும் பெறுநருக்கு இடையிலான வகிபாகம் பரிமாற்றம் பெறுவதைக் காட்டும் மாதிரி எது?
   1) ஹரோல்ட் டி லாஸ்வெல் மாதிரி
   2) ஷ்ராம் ஒஸ்குட் மாதிரி
   3) ஹப் (HUB) மாதிரி
   4) அரிஸ்ரோட்டில் மாதிரி
   5) ஷெனொன் வீவர் மாதிரி

02. "தொடர்பாடல் என்பது ஒருபோதும் தனித்திராத மாற்றத்திற்கு உட்படக்கூடிய ஒன்றாகும்" இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது தொடர்பாடல்,
   1) ஒரு வழி மற்றும் இருவழிப் போக்கானது என்பதாகும்.
   2) ஒரு சக்தி என்பதாகும்.
   3) ஒரு செயன்முறை என்பதாகும்.
   4) சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இயைவானது என்பதாகும்.
   5) குறியீட்டுப் பாவனையுடையது என்பதாகும்.

03. பாடசாலை மைதானத்தில் மயக்கமடைந்த மாணவரொருவருக்கு முதலுதவி வழங்கிய மாணவ தலைவர், தான் வாசித்திருந்த புத்தகங்கள் மூலம் பெற்றுக்கொண்ட விளக்கங்கள் மற்றும் முதலுதவி வழங்கும் முறை பற்றித் தான் அவதானித்திருந்த விடயங்கள் ஆகியன இதன்போது தனக்கு உதவின என்று கூறினார். இவ்விடயம் அடங்கும் தொடர்பாடல் மூலக்கூறாவது
   1) குறிமுறையாக்கம்
   2) குறிமுறையவிழ்ப்பு ஆகும்.
   3) பின்னூட்டம் ஆகும்.
   4) அனுபவக்களம் ஆகும்.
   5) தொடர்பாடல் ஆகும்.

04. ஒரே நாளில் ஒரே நேரத்தில் நாடு தழுவிய ரீதியில் மரநடுகை நிகழ்வொன்றை நடாத்துவது தொடர்பில் மக்களை அறிவூட்டுவதற்காகப் பயன்படுத்தக்கூடிய வினைத்திறனான தொடர்பாடல் வகை எது?
   1) மெய்நிகர் தொடர்பாடல்
   2) ஆளிடைத் தொடர்பாடல்
   3) குழுத் தொடர்பாடல்
   4) பொதுசனத் தொடர்பாடல்
   5) வெகுசனத் தொடர்பாடல்

05. சினிமா மற்றும் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பின் அடிப்படையாக அமைவது,
   1) மூலாதாரம் ஆகும்.
   2) திரைக்கதை ஆகும்.
   3) நடிப்பு ஆகும்.
   4) இயக்கம் ஆகும்
   5) ஒப்பனை ஆகும்.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

06. சமூக அறிவைப் பெற்றுத் தருதலோடு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ளும் விதம் தொடர்பாக அறிவூட்டும் ஊடகச் செயற்பாடு உள்ளடங்குவது,
   1) சுய எண்ணக்கருவிலாகும்
   2) மேற்பார்வையிலாகும்
   3) சமூகமயமாக்கலிலாகும்.
   4) அறிவாற்றலிலாகும்.
   5) விளங்கறிவிலாகும்.

07. மானுடத் தொடர்பாடலில் எண்ணங்கள், குறியீடுகள் ஆகியவற்றின் துணையுடன் தகவலாகப் பரிவர்த்தனை செய்யப்படும் செயன்முறை இனங்காணப்படுவது,
   1) பின்னூட்டம் உன்று
   2) குறிமுறையவிழ்ப்பு என்று
   3) குறிமுறையாக்கம் என்று
   4) குவிகை என்று
   5) விஸ்தீரணம் என்று

08. வெகுசன ஊடக நிறுவனங்கள் ஒரு சில விடயங்கள் தொடர்பில் அதிகளவு அதிகாரத்தைப் பயன்படுத்து கின்றன. இது ஹப் HUB மாதிரியில் குறிப்பிடப்படுவது,
   1) வடிகட்டிகள் மூலமாக
   2) தாக்கம் மூலமாக
   3) ஊடக விஸ்தீரணம் மூலமாக
   4) பின்னூட்டம் மூலமாக
   5) வாயிற்காப்பாளர் மூலமாக

09. அபிவிருத்திக்கான தொடர்பாடல் பயன்பாட்டின் போது பொருத்தமில்லாத கூற்று எது?
   1) கலந்துரையாடல்கள் செயற்றிறன்மிக்கதாகக் காணப்படும்.
   2) தொடர்பாடல் ஒருவழிப் போக்கானதாக நிகழும்
   3) பரந்த அளவில் கருவிகள் மற்றும் முறைகள் பயன்படுத்தப்படும்.
   4) முடிவுகளை எடுக்கும் போது பிரஜைகள் பங்குபற்றுவர்.
   5) கலந்துரையாடல்கள், வாத விவாதங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது.

10. அரிஸ்ரோட்டில் மற்றும் ஹரோல்ட் டி லாஸ்வெல் மாதிரிகளுக்கிடையிலான சமமின்மையை வெளிப் படுத்தும் கூற்று எது?
   1) தொடர்பாடுநர், தகவல் மற்றும் பெறுநர் உள்ளடங்கிய மாதிரிகளாகும்.
   2) ஒரு வழித் தொடர்பாடல் மாதிரிகள் ஆகும்.
   3) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறை விபரிக்கப்படும்.
   4) பின்னூட்டம் மற்றும் தடை குறிப்பிடப்படவில்லை.
   5) தாக்கம் தொடர்பில் அவதானம் வழங்கப்பட்டுள்ளது.

11. நிறுவனமொன்றில் ஊடக அதிகாரியின் பணிகளுடன் குறைந்தளவிலான தொடர்பைக் காட்டுவது,
   1) நிறுவனம் பற்றிய விமர்சனங்களுக்குப் பதில் அளித்தல்.
   2) மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தல்.
   3) மேம்பாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
   4) நிதி முகாமைத்துவத்திற்கு அறிவுரை வழங்குதல்
   5) புகழ் நாமம் பற்றி கவனமெடுத்தல்.

12. ஒரே வகுப்பில் கல்வி கற்ற நண்பர்கள் குழாத்தினர் பரீட்சையில் சித்தியெய்தியதன் பின்னர் புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு சென்றுவிட்டனர். அவர்கள் நவீன தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்தித் தகவல் பரிமாற்றிக் கொண்டனர். அத்தகவல் பரிமாற்றம் நிகழ்ந்தது,
   A. கருவித் துணையுடன் கூடிய மற்றும் குழுத் தொடர்பாடலினாலாகும்.
   B. மெய்நிகர் மற்றும் தொழினுட்பத் தொடர்பாடலினாலாகும்.
   C. கருவித் துணையுடன் கூடிய மற்றும் மெய்நிகர் தொடர்பாடலினாலாகும்.
   D. கருவித் துணையுடன் கூடிய மற்றும் தொழினுட்பத் தொடர்பாடலினாலாகும்.
   மேற்காணும் கூற்றுக்களில் உண்மையானவை
   1) A, B என்பனவாகும்.
   2) A, C என்பனவாகும்
   3) B, C என்பனவாகும்.
   4) C, D என்பனவாகும்.
   5) A, B, C, D என்பனவாகும்.

13. பேராசிரியர் பிலிப் கொட்லரினால் முன்வைக்கப்பட்ட நிகழ்வு வகைப்படுத்தலுக்குள் அடங்காத விடயமாக அமைவது,
   1) சமூக மற்றும் வாழ்வியல் நிகழ்வுகள்
   2) அரசியல் நிகழ்வுகள்
   3) கல்வி மற்றும் தொழில்சார் நிகழ்வுகள்
   4) சுற்றாடல் நிகழ்வுகள்
   5) ஆன்மீக நிகழ்வுகள்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

14. சுயதணிக்கைக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்ட தணிக்கை நிறுவனம் எது?
   1) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை
   2) இலங்கைப் பத்திரிகைப் பேரவை
   3) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
   4) இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
   5) இலங்கை கணினி அவசர சேவைகள் இணைப்பு நிலையம்

15. இணையத்தின் ஊடாக டிஜிட்டல் நூலகத்திற்குள் நுழைந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் உங்களுக்கு உள்ளதென எண்ணுங்கள். இதற்காகத் தேவைப்படும் காரணி எது?
   1) தரவுத்தளம் (Data Base)
   2) இடைத்தொடர்பு (Interactivity)
   2) தானியங்கி (Automation)
   4) வலையமைப்பு (Networking)
   5) அதிவேகச் செய்தியனுப்புகை (Fastest Messaging)

16. பண்பாடு என்பது,
   A. மனித அனுபவங்கள், பழக்கங்கள் மற்றும் ஆற்றல்களின் இணைவு ஆகும்.
   B. வெகுசன ஊடகங்கள் மூலமாகக் கற்பிக்கப்படும் மதிப்பீடுகளின் இணைவு ஆகும்.
   C. சமூகத்தை ஒன்றாக இணைக்கும் பெறுதிகளைக் கொண்டதாகும்.
   D. மனிதத் தொடர்புகளினால் உருவாகி விருத்தி பெற்றதாகும்.
   மேற்காணும் கூற்றுக்களில் மிகச் சரியானவை,
   1) A, B ஆகியன மாத்திரம்
   2) A. D ஆகியன மாத்திரம்
   3) A, B, C ஆகியன மாத்திரம்
   4) A, C, D ஆகியன மாத்திரம்
   5) B, C, D ஆகியன மாத்திரம்

17. எந்தவொரு நிறுவனத்திற்கும் அல்லது அமைப்பிற்கும் பொதுசனத் தொடர்பு அவசியமாக அமைவது,
   1) நிறுவனத்தின் புகழ் நாமத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு
   2) முறைசார் தொடர்பாடல் வழிமுறையின் பயன்பாட்டிற்கு
   3) நிறுவனம் அல்லது அமைப்பின் இலாபத்தை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு
   4) நிறுவனத்தின் இலாபத்தை அதிகரிப்பதற்கு
   5) ஏனைய நிறுவனங்களுடன் போட்டி நிலைமையினை உருவாக்குவதற்கு

18. பாரம்பரியத் தொடர்பாடல் விதிமுறையாக நாட்டார் நாடகங்களைப் பற்றிக் குறிப்பிடும் தவறான கூற்று எது?
   1) கண்ணுக்குப் புலப்படாத பொருட்களை அழைத்தல் மற்றும் அவற்றின் மூலம் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்.
   2) ஏதேனும் கதை ஒன்று நாட்டார் நாடகங்களுக்கு அடிப்படையாக்க கொள்ளப்படும்.
   3) பிரதேசங்களுக்கு ஏற்ப நாட்டார் நாடகங்களில் பல்வகைமை காணப்படும்.
   4) பாடல் பாடுதல், உரையாடல் என்பன பயன்படுத்தப்படும்.
   5) நடிப்புக்குத் தேவையான பொருட்கள் சூழலிலிருந்தே பெற்றுக் கொள்ளப்படும்.

19. 1982இல் யுனெஸ்கோ அமைப்பு குருன்வெல்ட் பிரகடனம் மூலம் ஊடகக் கற்கைகள் பற்றி வரையறுத்தது,
   1) ஊடக விளங்கறிவு, விமர்சன ரீதியாக ஊடக நுகர்வு மற்றும் படைப்பாக்க ரீதியான சிந்தனையை
      சிறுவர்களிடத்தே உருவாக்குதல் எனவாகும்.
   2) வெகுசன ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி மனிதர்களிடத்தே புரிதலை ஏற்படுத்துதல் எனவாகும்.
   3) தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சி சமூகத்தில் செலுத்தும் தாக்கத்தின் இயல்பை விளக்குதல்
      எனவாகும்.
   4) முறிவடைந்த உளவியல் நிலைமைகளைக் குறிவைத்து ஊடகம் மூலமாக எளிய மகிழ்வூட்டலை வழங்குதல் எனவாகும்.
   5) அபிவிருத்திசார் மற்றும் ஜனநாயக சிந்தனையுடன் கூடிய பிரஜையை உருவாக்குதல் எனவாகும்.

20. மெய்மை நிகழ்ச்சியொன்று பற்றிய பெறுநரது துலங்கல் எவ்வாறானது என்பது பற்றி அறிந்து கொள்வதற்கு நிமாலிற்கு அவசியம் ஏற்பட்டது. அதற்காக அவர் முதலில் செய்ய வேண்டியது,
   1) தரவுகளைத் திரட்டுதல் ஆகும்.
   2) தரவுப் பகுப்பாய்வு செய்தல் ஆகும்.
   3) நோக்கங்களை இனங்காணல் ஆகும்.
   4) மாதிரியொன்றைத் தெரிவு செய்தல் ஆகும்.
   5) தரவுகளைத் திரட்டும் முறையினை தயார் செய்தல் ஆகும்.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

21. திரைப்படமொன்றைத் திரையிடுவதற்கு முன்பதாக அதனைத் தணிக்கை செய்வது,
    1) பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை ஆகும்.
    2) தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஆகும்.
    3) கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகும்.
    4) தேசியத் திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆகும்.
    5) வெகுசன ஊடக அமைச்சு ஆகும்.

22. 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசயிலமைப்பு யாப்பில் 14 (1) (அ) உறுப்புரை மூலமாக ஒவ்வொரு பிரஜையினதும்,
    A. தகவலை மதிப்பிடும் உரிமை உறுதிப்படுத்தப்படுகிறது.
    B. பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகிறது.
    C. தகவல் பெற்றுக்கொள்ளும் உரிமை வெளிப்படுத்தப்படுகிறது.
    D. வெளியீட்டு உரிமை உறுதிப்படுத்தப்படுகின்றது.
    E. ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படுகிறது.
    மேற்காணும் கூற்றுக்களில் உண்மையாவது,
    1) A மாத்திரம் 2) B மாத்திரம் 3) C மாத்திரம்
    4) A, B, C ஆகியன மாத்திரம் 5) C, D, E ஆகியன மாத்திரம்

23. பஸ் வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த போது அருகில் அமர்ந்திருந்த நபர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறிக்கொண்டிருப்பது பவிக்குத் தொந்தரவாக இருந்தது. தனது கைத்தொலைபேசிக்குக் காதுகேள் பொறியை (Earphone) இணைத்த பவி வானொலியில் ஒலிபரப்பாகிய பாடலொன்றைச் செவிமடுக்கத் தொடங்கினான்.
    இது வெகுசனத் தொடர்பாடலில் எப் பயனாகக் கருதப்படுகிறது?
    1) மீள் ஒழுங்குபடுத்தல் (Deregulation) 2) சமூகமயமாதல் (Socialization)
    3) சமூகப் பயன்பாடு (Social Utility) 4) மீளப்பெறுதல் (Withdrawal)
    5) திசைதிருப்புதல் (Diversion)

24. ஊடக மொழிப் பாவனை பற்றிய தவறான கூற்றைத் தெரிவு செய்க.
    1) ஊடகத்தில் பயன்படுத்தப்படும் மொழியின் மூலமாகப் பெறுநரது உளவியல் நிலைமைகளை விருத்தி செய்யலாம்.
    2) ஊடகத்தில் பயன்படுத்தப்படும் மொழியின் மூலமாக சிலவேளைகளில் பெறுநர்கள் இலக்கினைத் தொலைத்து விடுவார்கள்.
    3) வாய்மொழியின் பல்வகைமையானது கட்புல ஊடகங்களின் எதிர்பார்ப்பைத் துரிதப்படுத்தும்.
    4) புதியஊடகங்களில் பயன்படுத்தப்படும் மொழி அச்சு ஊடக மொழிபோல் தரநிலையுடன் காணப்படாது.
    5) வானொலி ஊடகத்தில் விவரண ரீதியான பந்திகளைத் தவிர்ப்பது உசிதமானது.

25. தொடர்பாடல் செயற்பாட்டில் “மீள் ஒழுங்குபடுத்தல்” பற்றிய பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.
    1) செய்திப் பத்திரிகை அச்சுக் கடதாசிக்கு வரி அறவிடுதல்.
    2) செய்திப் பத்திரிகை பதிவு செய்யப்படுவதை கட்டாயமாக்குதல்.
    3) தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு இடையிலான போட்டியை இல்லாதொழித்தல்.
    4) செய்தி இணையத்தள அனுமதிப்பத்திரத்தை இற்றைப்படுத்தல்.
    5) ஊடக நிறுவனங்களுக்கு இலாபம் ஈட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல்.

26. தொலைக்காட்சி நாடகம் ஒன்று ஒளிபரப்பாகி முடிவடைந்ததன் பின்னர் ஒரு வியாபாரியினால் அது திருட்டுத்தனமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டமை அம்பலமாகியது. இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகத் தெளிவாகக் குறிப்பிடப்படுவது,
    1) தகவலறியும் உரிமைச் சட்டத்தில் ஆகும்.
    2) புலமைச் சொத்துச் சட்டத்தில் ஆகும்.
    3) மனித உரிமைகள் சட்டத்தில் ஆகும்.
    4) தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் ஆகும்.
    5) திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தில் ஆகும்.

27. ஏதேனும் ஒரு நிகழ்நிலைத் தரவுத் தளத்தினூடாக வெவ்வேறு தகவல் மூலங்களுக்குள் பிரவேசிக்க முடியுமாயிருப்பதைக் குறிப்பிடும் சொல் எது?
    1) எண்ணிமப்படுத்தல்.(Digitalization) 2) வலையமைப்பாதல் (Networking)
    3) இடைத்தொடர்பு (Interactivity) 4) மீயுரை (Hypertexuality)
    5) தானியங்கி (Automation)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

28. வானொலி, குரலை மையமாகக் கொண்ட ஊடகமாகும். இதில் மனிதக் குரலோடு சேரும் ஏனைய காரணிகளாக அமைவன,
   1) இசை, விலங்குகளின் ஒலி, ஒலிப் பிரயோகங்கள் மற்றும் நிசப்தம்
   2) இசை, நிசப்தம், விலங்குகளின் ஒலி மற்றும் இயற்றகையான ஒலி
   3) இயற்கையான ஒலி, உருவக ஒலி, ஒலிப் பிரயோகங்கள் மற்றும் நிசப்தம்
   4) உருவக ஒலி, இசை, நிசப்தம் மற்றும் ஒலிப் பிரயோகங்கள்
   5) இயற்கையான ஒலி, ஒலிப் பிரயோகங்கள், இசை மற்றும் நிசப்தம்

29. நினைவு மீட்டலை அடிப்படையாகக் கொண்ட மிகப் புராதன பண்டைய தொடர்பாடல்
   1) மேளச்சத்தம் 2) குகை ஓவியங்கள் 3) தீ மூட்டுதல்
   4) மரக்கிளைகளைத்தொங்கவிடுதல் 5) ஊச்சத்தம்

30. தனிமைப்படுத்தல் ஊரடங்கு ஒரு முறை நீக்கப்பட்தும் விதுராம் கடையை நோக்கிச் சென்றான். அவன் தனக்கு முன்னால் பொலிஸ் அதிகாரியைக் கண்டதும் முகக்கவசத்தை உடனடியாக அணிந்து கொண்டான். இந்த நடத்தைக்கு அடிப்படையாக அமையும் தொடர்பாடல் வகை
   1) வாய்மொழிசாராத் தொடர்பாடல் ஆகும். 2) ஆளுள் தொடர்பாடல் ஆகும்.
   3) காட்சி வழித் தொடர்பாடல் ஆகும். 4) ஆளிடைத் தொடர்பாடல் ஆகும்.
   5) அளிக்கைத் தொடர்பாடல் ஆகும்.

31. அமெரிக்காவில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டங்களினை அடிப்படையாகக் கொண்டு உலகில் முதலாவது பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தினை ஆரம்பித்துக் கொண்டவர்
   1) எட்வர்ட் எல். பெரிணிஸ் 2) ஐவி லீ
   3) ரோட் ஹன்ட்ஸ் 4) ஜேம்ஸ் குரூனிக்
   5) ஜீலியஸ் சீசர்

32. ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம் அவர்களினால் முன்வைக்கப்பட்ட விளக்கத்தில் பொருந்தாத தன்மை கொண்ட கூற்று
   1) இருவழிச் செயன்முறையுடன் தொடர்புடையது.
   2) பின்னூட்டல் செயன்முறையை ஆதரிக்கின்றது.
   3) நான்கு மூலதத்துவங்களினை அடிப்படையாக்க கொண்டது.
   4) குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பில் விளக்குவது
   5) சமநேரத்தில் பின்னூட்டலினை வெளிப்படுத்தியிருப்பது

33. ஏதேனும் ஒரு அமைப்புடன் தொடர்புடைய உள்ளக மற்றும் வெளியக அனைத்து தரப்பினருக்குமிடையிலும் பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் பொதுமக்கள் தொடர்பு ஆகும் என வரையறை செய்தவர்
   1) சார்ள்ஸ் பிளேகார்ட் (Charles placard)
   2) எட்வர்ட் எல் பெரிணீஸ் (Edward .L.Bernaays)
   3) சாம் பிளக் (Sam Black)
   4) ஜோசப் ஆர் டொமினிக் (Joseph R. Dominick)
   5) பிலிப் ஜே கிச்சன் (Philip J.Kitchen)

34. குறித்த ஒரு சமூகத்தில் இனவர்க்க வேறுபாட்டினை அதிகமாக நலிவடைவதனை ஊக்குவிக்கும் பண்பாட்டு போக்கு
   1) நாட்டாரியல் பண்பாடு 2) பூகோளப் பண்பாடு
   3) பாரம்பரிய பண்பாடு 4) செம்மைப் பண்பாடு
   5) இனப் பண்பாடு

35. வெகுசன ஊடகங்களின் பணிகள் தொடர்பில் ஆராய்கின்ற போது பாதுகாவலர் ஒருவருடைய வகிபாகம் கலந்துரையாடல் சபையில் வகிபாகம், ஆசிரியர் ஒருவரின் வகிபாகம் ஆகியன தொடர்பில் குறிப்பிடுபவர்
   1) ஹரோல்ட்.டி.லாஸ்வெல் 2) வில்பர் ஷ்ராம்
   3) டானியல் லேனர் 4) லூசியன் பை
   5) மார்ஷல் மக்லுஹான்

36. பிரதான ஒலிபரப்பு சேவைக்குப் புறம்பாக பிரதேச ஒலிபரப்பு சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டன. கீழ் வருவனவற்றில் முதலாவது பிரதேச வானொலிச் சேவையாக அறிமுகப்படுத்தப்பட்ட சேவை
   1) ரஜரட்ட சேவை 2) ருஹுபுனு சேவை
   3) கிராந்துரு கோட்டை 4) கண்டி சேவை
   5) மகாவலி சேவை



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

37. அபிவிருத்தி தொடர்பாடல் செயற்றிட்ட அறிக்கையானது எதிர்காலத் திட்டங்களிற்கு முக்கியமானது
1) இலக்குகள் மற்றும் குறிக்கோள் விபரங்களைக் குறிப்பிட்டு இருத்தல்.
2) அனுசரணை வழங்குபவரின் விபரங்களைக் குறிப்பிட்டு இருத்தல்.
3) தோன்றிய பிரச்சினைகள் குறைபாடுகளை உள்ளடக்கியிருத்தல்.
4) செயற்றிட்டக் குழு பற்றிய விபரத்தை வழங்குதல்.
5) வேறுபட்ட பார்வைகளுக்குச் சந்தர்ப்பமளித்தல்.

38. பொதுமக்கள் தொடர்பு நிறுவனம் ஒன்றின் வேலைத்திட்டங்கள் பொது மக்களிற்கு தெளிவுபடுத்துவதற்கும் அதன் வாயிலாக நிறுவன நன்மதிப்பு உயர்த்துவதற்கும் ஏதுவான வெளியகப் பொதுசனத் தொடர்பினை மாத்திரம் கொண்ட தொகுதி
1) ஊழியர் ஒன்றுகூடல், அனுசரணை, விளம்பரம், கண்காட்சி
2) பத்திரிகைப் புகைப்படம், கண்காட்சி, அனுசரணை, செய்திமடல்
3) அறிவிப்புப் பலகை, நலன்புரி அமைப்புக்கள், சுற்றுலாக்கள், கண்காட்சி
4) அனுசரணை, அறிவிப்புப் பலகை, கண்காட்சி, விளம்பரம்
5) செய்தி மடல், நேரடித் தொலைபேசி இலக்கம், அனுசரணை, சுற்றுலாக்கள்

39. பூகோளப் பண்பாடு பற்றி இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் மாணவர்களால் வகுப்பறையில் முன்வைக்கப்பட்டன.
சாமா: தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியோடு வெவ்வேறு நாடுகளின் தேசிய பண்பாடுகள் நெருங்கி வந்துள்ளன.
அமர்: பூகோளப் பண்பாடு, பாரம்பரிய வெகுசன மற்றும் தேசிய பண்பாட்டு வகைப்பாடுகளுக்கு ஒத்துள்ளது.
குமார்: சகல இனங்களும், பண்பாடுகளும் ஒத்த தன்மையாயிருத்தல் சமகால பூகோளச் சிக்கலாகும்.
தேவி: பூகோளப் பண்பாடு உலகளாவிய தேசிய இனப்பண்பாடுகளை இல்லாதொழிக்கும்.
மேற்காணும் கூற்றுக்களில் சரியான கூற்றுக்களை முன்வைத்தவர்கள்,
1) சாமா, அமர் மற்றும் தேவி ஆகும்.
2) சாமா, அமர் மற்றும் குமார் ஆகும்.
3) சாமா, குமார் மற்றும் தேவி ஆகும்.
4) அமர், குமார் மற்றும் தேவி ஆகும்.
5) அமர், சாமா மற்றும் தேவி ஆகும்.

40. ஊடக விமர்சனத்தின் சமூகத் தேவையை பிரதிபலிக்காதது
1) ஊடக உள்ளடக்க இயல்பையும் நிகழ்ச்சி நிரலினையும் வெளிக்காட்டாது.
2) புலனுணர்வு உயர் மட்டத்தில் வைத்துக் கொள்ளுதல்
3) ஊடகத்தின் சமூக வகிபங்கு கலாசார தாக்கம் பற்றிய போக்குகளை அறியச் செய்தல்.
4) மக்களை மந்த நிலையிலிருந்து செயற்படு நிலைக்குக் கொண்டு செல்லுதல்.
5) படைப்பாளிகள் தமது ஆக்கங்கள் தொடர்பில் பூரண அறிவினைப் பெறுதல்.

41. வெகுசன ஊடக கருத்தாக்கத்தின் படி புலமைசார் சொத்துடமைச் சட்டம் மற்றும் இலங்கை பத்திரிகை சபைச் சட்டம் ஆகிய தொடர்புபடும் எண்ணக்கருவின் கருத்தாக்கங்களினை முன்வைத்தோர்.
1) ஜோன் மில்ரன் தோமஸ்ஜெபர்சன்
2) வில்பர் ஷ்ராம, டெக்கார்டே
3) ஏஞ்சல் மாக்கியவல்லி
4) வில்பர் ஷ்ராம், ஜோசப் கோயபல்ஸ்
5) வில்பர் ஷ்ராம், வில்லியம் ரிவர்ஸ்

42. கீழ்க்காணும் A, B, C, D ஆகிய சோடிச் சந்தர்ப்பங்களை உள்வாங்கி விடையளிக்குக.
A. சிந்தனைக் கிளர்வு / மூளைப்புயல் - பிர்ச்சினையை இனங்காணல்
B. நோக்கத்தை இனங்காணல் - முடிவுகளை எடுத்தல்
C. தரவுகளைத் திரட்டல் - அறிக்கை எழுதுதல்.
D. முடிவுகளை எடுத்தல் - அறிக்கை எழுதுதல்.
ஒவ்வொரு சோடியிலும் காணப்படும் விடய உள்ளடக்கங்கள் இடையே மிகவும் நெருங்கிய தொடர்பைக் காட்டுவன,
1) A மற்றும் B ஆகும்.
2) A மற்றும் C ஆகும்.
3) A மற்றும் D ஆகும்.
4) B மற்றும் C ஆகும்.
5) C மற்றும் D ஆகும்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk


agaram.lk

43. அபிவிருத்திக்கான நோக்கங்களோடு தொடர்புபடாத அம்சம்
 1) தேவைகளை மையப்படுத்தாத நடவடிக்கை
 2) சுய நிர்ணயம்
 3) தன்னம்பிக்கை
 4) சிறந்த சூழலை கட்டியெழுப்பல்
 5) பங்கு பற்றல் ஜனநாயகம்

44. இனங்களிற்கிடையே செய்தி பரவும் விதம் பற்றியும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் செய்திப ற்றிய குறைவான அவதானம் மற்றும் யதார்த்தத்தை திரிபுபடுத்துவதற்கான போக்கு காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்ட அறிஞர்
 1) ஹேர்பட் ஷெல்லர்
 2) சீன் மக்பிறைட்டின்
 3) வில்பர் ஷ்ராம்
 4) எட்கர் ஒவ்வன்ஸ்
 5) ஹரோல் டி.லாஸ்வெல்

45. பாடசாலை ஊடக அலகினால் பிரசுரிக்கப்படும் வார சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் சில கீழ்வருமாறு:
 A. விமர்சன ரீதியான ஊடக நுகர்வு
 ஊடக ஒழுக்க நெறிகள் பற்றிய அறிவு
 B. ஊடகக் கொள்கைகள் குழு ஒன்றை நியமித்தல்
 ஊடக ஒழுங்குபடுத்தல்
 C. தகவல் பெற்றுக் கொள்ளுதல் பற்றிய அறிவு
 சிறந்த பிரஜையாக அபிவிருத்திக்குத் துணைபுரிதல்.
 D. சந்தர்ப்பத்திற்கு உகந்த மொழிப் பாவனை
 படைப்பாக்க ரீதியான திறன் விருத்தி

 மேற்காணும் விடயங்களில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைகள் பாடத்தைக் கற்பதன் தேவை பற்றிய இழிவளவான முக்கியத்துவத்தைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
 1) A மாத்திரம்
 2) B மாத்திரம்
 3) A, C மாத்திரம்
 4) B, D ஆகியன மாத்திரம்
 5) C, D ஆகியன மாத்திரம்

46. அபிவிருத்தியில் பொதுமக்கள் தொடர்பிலான நான்கு அம்சங்களை சீனக்குடியரசின் முன்னாள் தலைவரான மாவோ சேதுங் அறிமுகப்படுத்தினார். சரியாக அந்த அம்சங்களினைக் கொண்டிருக்கும் தெரிவை தெரிவு செய்க.
 1) அறியும் ஆற்றல், சமூகத்தின் பங்களிப்பு, நகரமயமாக்கம், எண்ணளவாக்கம்
 2) தொகுப்பாக்கம், தொழிற்பிரிப்பாக்கம், நம்பகத் தன்மை, நடைமுறையாக்கம்
 3) எண்ணவாக்கம், நகரமயமாக்கம், தொழிற்துறையாக்கம், நவீனமயமாக்கம்.
 4) அறியும் ஆற்றல், தொகுப்பாக்கம், எண்ணளவாக்கம், நடைமுறையாக்கம்
 5) தொழிற்துறையாக்கம், நகரமயமாக்கம், நவீனமயமாக்கம், மேற்கத்தைய மயமாக்கம்

47. வெகுசன ஊடகப் பெறுநர்கள் ஐவரது ஊடகப் பாவனை பற்றிய தகவல் கீழே காணப்படுகிறது.
 A. செய்திப் பத்திரிகைகள் மீதான பார்வையை முன்வைக்கும் காலைநேரத் தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்துவிட்டு நகரத்திற்குச் சென்று பத்திரிகை வாங்குவார்.
 B. கைத்தொலைபேசியில் காலைநேர வானொலி செய்தி அறிக்கையைச் செவிமடுத்துவிட்டு பெற்றுக்கொண்ட செய்திக் குறுந்தகவல்களை (News Alerts) வாசிப்பார்.
 C. அலுவலகத்திற்குச் செல்லும்போது திறன் தொலைபேசி (Smart Phone) மூலம் செய்தி இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களுக்குள் பிரவேசிப்பார்.
 D. இரவு உறங்குவதற்கு முன்னர் தொலைக்காட்சிச் செய்தி மற்றும் வானொலிச் செய்திகளை இணையத் தளங்களில் ஆராய்ந்து, செய்திப் பத்திரிகை இணையத்தளங்களை சமூக ஊடகங்கள் மூலம் வாசிப்பார்.
 E. You Tube மூலம் திரைப்படம் ஒன்றைப் பார்த்து முகநூல் மூலம் அது தொடர்பான செய்திகளை வாசிப்பார்.

 மேற்காணும் பெறுநர்களில் ஊடகக் குவிகையுடன் மிகவும் நெருக்கமுடைய பெறுநர் குழுவில் இடம் பெறுவோர்.
 1) A, B, C மற்றும் E ஆகியோர்
 2) A, C, D மற்றும் E ஆகியோர்
 3) B, C, D மற்றும் E ஆகியோர்
 4) B, D மற்றும் E ஆகியோர்
 5) C, D மற்றும் E ஆகியோர



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

48. தமது பாடசாலை பற்றிய விவரணப் படமொன்றை ஒளிப்பதிவு செய்யும் போது ஒளிப்படங்களை ஒழுங்க மைக்கும் விதம் பற்றிய மாணவர்களது உரையாடலின் போது கீழ்க்காணும் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

A. முழு பாடசாலையும் தென்படும் வண்ணம் பாடசாலையின் முற்பக்கத் தோற்றம் ஒளிப்பதிவு செய்யப் படவேண்டும்.

B. வகுப்பறையில் பாடம் கற்பிக்கும் ஆசிரியரது உருவம் வகுப்பறையின் பின்னணியுடன் காட்டப்பட வேண்டும்.

C. அதிபரது முன்வைப்பின் போது அவரது முகபாவங்கள் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.

D. திரைப்படத்தின் இறுதிக் காட்சியாக பாடசாலையின் சின்னம் காட்டப்பட வேண்டும்.

மேற்காணுபவற்றை ஒளிப்பதிவு செய்யும் போது மிகவும் பொருத்தமான பட ஒழுங்குமுறையாக அமைவது,

1) நீள் எடுப்ப, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு, அண்மைநிலை எடுப்பு
2) நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நெடுந்தொலை எடுப்பு
3) நெடுந்தொலை எடுப்பு, இடைநிலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மை நிலை எடுப்பு
4) நெடுந்தொலை எடுப்பு, நீள் எடுப்பு, மிகு அண்மைநிலை எடுப்பு, அண்மைநிலை எடுப்பு
5) மிகுநெடுந்தொலை எடுப்பு, நீள் எடுப்பு, அண்மைநிலை எடுப்பு, மிகு அண்மைநிலை எடுப்பு

49. பின்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க.

A. மக்பிறைட் அறிக்கை - ஒரு நாட்டில், சமத்துவமின்மைகளை வேரறுப்பதற்காகத் தொடர்பாடல் கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டும்.

B. சமஷ்டி தொடர்பாடல் ஆணைக்குழு - காலனித்துவ நாடுகளில் வானொலி ஊடகத்தைக் கையாள்வதற்கான கொள்கைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

C. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்- தனக்கென அபிப்பிராயத்தை வைத்திருக்கும் சுதந்திரம் மற்றும் வெளியிடும் உரிமை ஒருவருக்கு உண்டு.

மேலுள்ள கூற்றுக்களுள் நேரடித் தொடர்பைக் காட்டும் சோடி / சோடிகள் காணப்படும் தெரிவு

1) A மாத்திரம்
2) B மாத்திரம்
3) A, B ஆகியன மாத்திரம்
4) A, C ஆகியன மாத்திரம்
5) B, C ஆகியன மாத்திரம்

agaram.lk

50. வெவ்வேறு நிறுவனங்களைப் பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A. : இலங்கைப் பத்திரிகைப் பேரவை — 1: ஜனாதிபதி தலைவரையும் பணிப்பாளர் சபையையும் நியமிப்பார்.

B. : இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு — 2:விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் உறுப்பினர்களை நியமிப்பார்.

C. : பொது அளிக்கைக் கட்டுப்பாட்டுச் சபை — 3: வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த புத்திஜீவிகளைக் கொண்டதாக இச்சபை அமையும்

D. : இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு — 4: அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தமது உத்தியோகபூர்வ அதிகாரத்தின் கீழ் பணிப்பாளர் சபையின் உறுப்பினராவார்.

இவற்றுள், நிறுவனங்களிற்கும் பதவி நிலைகளுக்குமான சரியான தொடர்பைக் காட்டும் தெரிவு,

1) A1, B2, C3, D4
2) A2, B1, C3, D4
3) A3, B2, C4, D1
4) A1, B3, C2, D4
5) A4, B3, C2, D1



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
5th Term Examination - 2023

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் II<br>Communication & Media Studies II | Three Hours<br>Gr -13 (2022) | 29 | T | II |

மேலதிக நேரம் பத்து நிமிடம்

## பகுதி – II

**அறிவுறுத்தல் :-**
- **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் 40 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.**

01. **தொடர்பாடல் ஒரு கூட்டிணைப்புச் செயற்பாடாகும்.**
   1) ஆளுள் தொடர்பாடலின் இயல்புகள் **நான்கினைப்** பெயரிடுக.
   2) பாடசாலை ஊடக வட்டத்தில் குழுத் தொடர்பாடலைப் பயன்படுத்துவதன் **இரண்டு** அனுகூலங்களினை சுருக்கமாக விபரிக்குக.
   3) படைப்பாக்கத் தொடர்பாடல் வழிமுறைகளில் நாட்டாரியல் தனித்துவமானது. நாட்டாரியலின் விசேட இயல்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விபரிக்குக.
   4) தொடர்பாடலின் நோக்கங்கள் நான்கினை வெகுசன ஊடகங்களினை அடிப்படையாக கொண்டு உதாரணங்களுடன் ஆராய்க.

02. **சமூகச் செயற்பாடுகளுக்கு தகவல் பரிமாற்றம் முக்கியமானது.**
   1) ஒஸ்கூட், ஷ்ராம் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட மாதிரியின் அடிப்படையில் குறிமுறையவிழ்ப்பினை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு ஏதுவாகும் காரணியைப் பெயரிட்டு அதன் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.
   2) குளோட் ஷெனென் மற்றும் வொரன் வீவர் மாதிரியின் விசேட இயல்புகள் இரண்டினை விபரிக்குக.
   3) நாட்டார் வாழ்வியலில் ரிதம் (சந்தம்) நாட்டார் பாடல்களில் உள்ளார்ந்து காணப்படுகின்றது. நாட்டார் பாடல்களில் காணப்படுகின்ற தொடர்பாடல் பண்புகள் **மூன்றினை** விளக்குக.
   4) சமூகம் மற்றும் பண்பாட்டில் வெகுசன ஊடகங்களை விட சமூக ஊடகங்கள் அதிக தாக்கத்தினைச் செலுத்துகின்றன. இதற்குச் சார்பாக அல்லது எதிராக **நான்கு** காரணிகளுக்கூடாகக் கலந்துரையாடுக.

03. **இலங்கை ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகும்.**
   1) அபிவிருத்தி செயற்றிட்டம் ஒன்றில் முன்மொழிவு தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்படும் விடயங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
   2) அபிவிருத்தி தொடர்பாடல் எனும் எண்ணக்கரு அபிவிருத்தி எனும் பதத்திலிருந்து எவ்வாறு வேறு படுகின்றது என்பதனைத் தகுந்த ஆதாரங்களுடன் நியாயிக்குக.
   3) அபிவிருத்தி தொடர்பாடலில் முக்கியம் பெறும் பின்வரும் விடயங்க்ள தொடர்பில் விளக்குக.
      அ) பங்குபற்றல் ஜனநாயகம்.
      ஆ) வறுமையை ஒழித்தல்
      இ) உள்ளூர் மயமாக்கல்
   4) அ) நீர் உமது பாடசாலையில் மேற்கொள்ளத்தக்க அபிவிருத்தி செயற்றிட்டங்கள் **இரண்டினைப்** பெயரிட்டு விளக்குக.
      ஆ) அபிவிருத்தி திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் **இரண்டினை** விளக்குக.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

04. **"படைப்பாற்றல் மற்றும் தொடர்பாடலுக்கு இடையே காணப்படுவது வேறு பிரித்திட முடியாத உறவு ஆகும்"**
   1) தொடர்பாடலில் படைப்பாற்றல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் **இரண்டினைச்** சுருக்கமாகக் குறிப்பிடுக.
   2) பிரதான திரைப்பட வகைப்பாடுகள் **நான்கைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றை** விவரிக்குக.
   3) புராதன மானுட சமூகத்தில் பொதுமக்கள் தொடர்பைப் பேணுவதற்காகப் பயன்படுத்திய படைப்பாக்க பூர்வமான முறைகள் **மூன்றினை** உதாரணங்களூடாக விளக்குக.
   4) அ) உமது பாடசாலையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தைத் தயாரிக்கும் பணி உமக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் முதற்பக்கத்தில் (Home Page) உள்ளடக்கப்படும் விடயங்கள் **நான்கைக்** குறிப்பிடுக.
   ஆ) அவ்விடயங்கள் உமது பாடசாலையின் தனித்துவத்தினைக் காட்டும் வண்ணம் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தினை ஆராய்க.

05. **அபிவிருத்திக்காகத் தொடர்பாடலைப் பயன்படுத்தும் போது வெகுசன ஊடகத் தகவல்கள் பற்றிய மக்களது கருத்துக்களை அறிந்து செயற்படுதல் அவசியமானது**
   1) அபிவிருத்தி பற்றி பேராசிரியர் விமல்திசநாயக்காவின் கருத்தியலில் உள்ளடங்கும் **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.
   2) பிரசித்த பண்பாட்டின் பண்புகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விபரிக்குக.
   3) அ) விளம்பரப்படுத்தல் பொதுசனத் தொடர்பில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை **நான்கு** விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடுக.
   ஆ) தொலைக்காட்சி ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சி வகைகள் **இரண்டினை** விபரிக்குக.
   4) பெறுநர் ஒருவர் ஊடக விளங்கறிவினைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை **நான்கு** அம்சங்களினைப் பயன்படுத்தி ஆராய்க.

06. 1) புதிய ஊடகங்களில் காணப்படக்கூடிய இயல்புகள் **நான்கினைப்** பட்டியலிடுக.
   2) உலகில் ஊடக ஒழுங்குமுறைப்படுத்தலில் பயன்படும் அடிப்படை அணுகுமுறைகள் **நான்கினைப்** பெயரிட்டு **ஒன்று** பற்றி விபரிக்குக.
   3) புலமைச் சொத்துச் சட்டம் மற்றும் தகவலறியும் உரிமைச் சட்டம் ஆகியவற்றை அதன் தோற்றுவாய் மற்றும் பணிகளினை அடிப்படையக கொண்டு விளக்குக.
   4) புதிய ஊடகத்தில் பயன்படும் மொழியினால் தேசிய மொழிகள் எவ்வாறு சவால்களுக்கு ஆட்படுகின்றன என்பதனைப் பின்வரும் அம்சங்களினைப் பயன்படுத்தி உதாரணங்களுடன் விளக்குக.
   - சுருக்கமான பதங்கள்
   - கலப்பு மொழி
   - தவறான மொழிப்பாவனை
   - ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி சொந்த மொழிகளை எழுதுதல்.

07. 1) வாய்மொழித் தொடர்பாடலின் பணிகள் **நான்கினைப்** பெயரிடுக.
   2) அ) இடைத்தொடர்பு விருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபையினால் இனங்காணப்பட்டுள்ள தொடர்பாடல் பிரவேசங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.
   ஆ) நாட்டின் ஊடகக் கொள்கையை விருத்தி செய்யும்போது கவனஞ் செலுத்தவேண்டிய **இரண்டு** அம்சங்களை எழுதுக.
   3) தொலைக்காட்சி ஊடகத்திற்கும் திரைப்படத்திற்குமிடையிலான வேறுபாடுகளை **மூன்று** அம்சங்களின் அடிப்படையில் ஆராய்க.
   4) பின்வரும் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுக.
   அ) ஊடக அறிவித்தல் / ஊடக வெளியீடு
   ஆ) வியாபார பொதுமக்கள் தொடர்பு
   இ) பத்திரிகையின் படைப்பாக்கத் தன்மை
   ஈ) கமரா அசைவுகள்